முருகப்பெருமான் துணை

**மகான் காரைக்கால் அம்மையார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.07.2022**, புதன்கிழமை

1. அவதார ஞானியே அரங்கனே
ஆறுமுகனார் ஞான வடிவான
அவதாரமே கலியுகத்தின் மீட்பே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது மிதுனதிங்கள்
இருபான்நவ திகதி கணக்கன்வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 29 நாள், 13.07.2022 புதன்கிழமை)
இயம்பிடுவேன் அருளாசி தன்னை
3. தன்னையே காரைக்கால் அம்மையாரும்
தரணியே நலம் காண உரைப்பேன்
மண்ணுலகம் மாண்புள மக்களை
மகான்களை அடைய வேண்டுமாயின்
4. வேண்டியே ஞானிகள் பூசை
விடாது உலகினில் செய்து
தொண்டெனும் சன்மார்க்க வழி
தேசிகன் காட்டி மக்களுக்கருள
5. அருளும் ஞான சபையாம்
அரங்கன் பிரணவக்குடிலுக்கு
வரமென தொடர்ந்து வந்து
வணங்கி தீட்சை பெற்று வர
6. வருகவே தனித்தன்மை கூடி
வளரும் ஜீவ தயவு நிலை
முருகப்பெருமான் வழிபாடாக
முழுமை நிலை ஞானம் வழி பெருகி
7. பெருகியே உலகம் எங்கிலும்
பேரானந்த கதி நிலை ஆகி
தருமநிலை வளரும் உயரும்
தரணியோர்க்கு அரங்கமகான் ஆசியால்
8. ஆசியால் ஞானவான்களாகும்
அனைத்து தேவைகளும் பெருகி
வாசியோகம் சர்வ சித்தியும்
வசமாகும் கலியுக மக்களுக்கு
9. மக்களுக்கு தேட்டு தனவளம்
மனபலம் சகல வளமும் கூடி
தேக்கமின்றி இடர்களை வெல்லும்
தெய்வபலமும் கூடி நிற்கும்

10. நிற்கவே கலியின் துன்பங்களை
நிலவுலகை விட்டு விரட்டும்
அற்புதம் கொண்ட மக்களை
ஆறுமுகன் ஆசிபெற்றவர்களாய்
11. ஆகவே சக்தி பெருகி
அனைவரும் ஞானவான்களாய்
யுகமாற்றம் செய்யும் ஞானிகளாய்
உருவெடுப்பர் அரங்கன் தயவால்
அருளாசி முற்றே

–சுபம்–